**පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය: 492**

**ආයතනයේ නම : දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, මන්නාරම**

**පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභා ගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු ආයතන භාර අමාත්‍යවරයා ගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.**

**பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம் : 492**

**நிறுவனத்தின் பெயர் : மாவட்டச் செயலகம், மன்னார்**

**பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் நிறுவனங்களிற்குப் பொறுப்பான கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.**

**Parliamentary Series No : 492**

**Name of the institution: District Secretariat, Mannar**

**Submission of observation of the Hon. Minister in charge of the institutions and steps taken with regard to the reports tabled by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)**

**இலங்கை பாராளுமன்றத்தின் பொதுக் கணக்குக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட நிலையியற் கட்டளை 119 (4) தொடர்பாக எடுக்கப்பட்ட அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பாராளுமன்றத்திற்கு வழங்குதல்**

பாராளுமன்ற தொடர் இல : 492

நிறுவனத்தின் பெயர் : மாவட்டச் செயலகம், மன்னார்

| இல | செயல்திறன் மதிப்பீட்டில் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகள் | குறைபாடுகளை தீர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் /தற்போதைய நிலை |
|---|---|---|
| 01 | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில் அனுப்பப்படவில்லை. | உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு தற்போது ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. |
| 02 | உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் சமர்பிக்கப்பட்டிருக்காமைக்கான சந்தர்ப்பங்கள் காணப்பட்டிருந்தன. | உரிய அலுவலர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டு தற்போது ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்பப்பட்டு வருகின்றன. |
| 03 | ஒரு வாகனம் பாவனையிலிருந்து ஒதுக்கப்பட்டு 8 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதியில் அகற்றப்படவில்லை. | குறித்த வாகனமானது உரிய அனுமதிகளுடன் தேசிய காப்புறுதி நம்பிக்கை நிதியத்திடம் கையளிக்கப்பட்டு, இழப்பீட்டு தொகையான ரூபா.4,950,000.00 பெறப்பட்டு 18.09.2024ம் திகதி பதிவழித்தல் செய்யப்பட்டுள்ளது. |
| 04 | வங்கி இணக்க கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்ட சீராக்கல் செய்யப்படவேண்டிய மீதிகள் தொடர்பில் நிதி ஒழுங்குவிதிகளின்படி செயலாற்றி குறித்த மீதிகள் ஒரு மாத காலத்தினுள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | வங்கி இணக்க கூற்றில் சீராக்கல் செய்ய முடியாமைக்கான காரணம் - குறித்த காசோலை மோசடி தொடர்பில் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நடவடிக்கை எடுக்கப்பட்டு குறித்த இழப்பீட்டுத்தொகை தவணை அடிப்படையில் உரிய அலுவலரிடமிருந்து அறவிடப்பட்டு வருகின்றது. குறித்த தொகை ரூபா.1,371,155.87 இல் தற்போது ரூபா.1,021,300.00 அறவிடப்பட்டு மிகுதித் தொகையான ரூபா.349,855.87 அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் குறித்த விடயம் தொடர்பில் நீதவான் நீதிமன்றத்தில் வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. |

| | | |
|---|---|---|
| 05 | ஓராண்டுக்கும் மேலாக காணப்படும் நிலுவைக் கடன் மீதிகள் தீர்க்கப்படவில்லை. | ஓராண்டுக்கு மேலாக காணப்படும் நிலுவை கடன் மீதிகளானது பதவி வறிதாக்கப்பட்ட மற்றும் இடைநிறுத்தப்பட்ட அலுவலர்களுடையது. அவை தற்போது உடன்படிக்கைக்கு அமைய பிணையாளர்களிடமிருந்து மாதாந்தம் அறவிடப்படுகிறது. மேலும் விழா முற்பண நிலுவையான ரூபா.6750.00 ஆனது பிணையாளர் இல்லாமையால் உரிய அலுவலரான பதவி வறிதாக்கப்பட்ட திரு.மலீஸ் என்பவரிடமிருந்தே அறவிடவேண்டிய நிலையில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| 06 | மாவட்ட உர ஒருங்கிணைப்பு குழு மாதந்தோறும் கூட்டப்படவில்லை | மாவட்ட உர ஒருங்கிணைப்பு குழு தற்போது காலாண்டிற்கு ஒரு முறை கூட்டப்படுகின்றது. எனினும் எதிர்வரும் காலங்களில் மாதந்தோறும் கூட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 07 | மாவட்ட விலை நிர்ணயக் குழு கூட்டங்கள் மாதந்தோறும் நடைபெறவில்லை. | மாவட்ட விலை நிர்ணயக் குழு கூட்டங்கள் தற்போது காலாண்டிற்கு ஒரு முறை நடைபெற்று வருகின்றது. எனினும் எதிர்வரும் காலங்களில் மாதந்தோறும் நடாத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| 08 | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான / ஒப்புதலளிக்க மறுக்கின்ற / பாதகமான மட்டத்தில் நிலவியது. | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயத்தினை தகுதியான மட்டத்திற்கு விரைவில் கொண்டு வருவதற்கான பொருத்தமான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

மாவட்டச் செயலாளர்

மாவட்டச் செயலகம்

க. கனகேஸ்வரன்
மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்
மன்னார் மாவட்டம்.

பிரதம கணக்காளர்

மாவட்டச் செயலகம்

கி. யோகேந்திரன்
பிரதம கணக்காளர்
மாவட்ட செயலகம்
மன்னார்.

**செயலாளரின் பரிந்துரை**

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

S. Alokabandara
Secretary
Ministry of Public Administration,
Provincial Councils and Local Government

**அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்**

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2026 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

மாண்புமிகு (பேராசிரியர்) ஏ. எச். எம். எச். அபயரத்ன அவர்கள் (பா.உ)
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

Prof. A.H.M.H. Abayarathna
Minister of Public Administration, Provincial
Councils and Local Government
Independence Square, Colombo 07.